II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 112/2021**

Deposition of witness for the Petitioner / PW 1
solemnly by S.Ramanujam, Translator
in accordance with the provision of Act I for 1873 on . 03.08.2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Shebana | Caste | : | |
| Father's / Husband's Name | : | Karim bhasha | Calling | : | |
| Age | : | | Religion | : | |
| Village | : | | Taluk | : | |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் மனுதாரர். என்னுடைய பிரமாண பத்திரத்தின் விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை. அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை. அதில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். என் தரப்பு ஆவணங்களாக 1 முதல் 14 வரை குறியீடுசெய்ய வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை—

விபத்தை எனக்கு நேராக தெரியாது. என் தம்பி சொல்லி தான் தெரியும். என் கணவர் டாட்டா ஏர்ஸ் வானகத்தை ஓட்டி அதன் மூலம் மாதம் ரூ.35 ஆயிரம் சம்பாத்தியம் செய்தார். அந்த வாகனம் அவருடைய பெயரில் தான் இருக்கிறது. ரூ.35 ஆயிரம் வருமானம் வருகிறது என்பதை காண்பிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. முதல் தகவல் அறிக்கையில் முதல் பக்கத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் எண் மட்டும் கொடுக்கபட்டிருக்கிறது. FIR-ன் சுருக்கத்தில் பழுதாகி நின்ற என் கணவரின் டாட்டா ஏஸ் வாகனத்தின் பின்னால் 1ம் எதிர்மனுதாரர் வான டிரைவர் ஓட்டிவந்த மற்றொரு டாட்டா ஏஸ் வாகனம் மோதி விபத்தி சிரிது தூரம் சென்று நின்றபோது அந்த வாகனத்தின்

மீது மற்றொரு மாருதி ஹிக்னீஸ் கார் மோதி நின்றதாக சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் மோதிய டாட்டா ஏஸ் வாகனத்திற்கு காப்பீடு இல்லாததால், இரண்டாவது மோதிய மாருதி ஹிக்னீஸ் கார் மீது இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லை என்றாலும், 2ம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லை என்பதாலும், அதனால் 3ம் எதிர்மனுதாரர் எந்தவித நஷ்ட ஈடும் கொடுக்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை 3ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.